பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஹூ வைகாசி மீ 28 உ செவ்வாய்க்கிழமை (11-06-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 189

★ நேற்றைய நிகழ்ச்சியில் திடீரெனப் பங்குபற்றினார்

# சாவகச்சேரி விழாவில் மக்களோடு பிரபாகரன்



வே. பிரபாகரன்

## தமிழீழ தேசிய விருதுகளை வழங்கி மாமனிதர்களை கௌரவித்தார்

— உதயன் அலுவலக விசேட பிரதிநிதியும், தென்மராட்சி சிறப்புச் செய்தியாளர்: ஐ. கிருஷ்ணனும் —

சாவகச்சேரி, ஜூன் 11

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன், நேற்று சாவகச்சேரியில் நடந்த முத்தமிழ் விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். தமிழீழ தேசிய விருதுகளைப் பெறும் மாமனிதர்களுக்கு அவற்றை அவர் விழாவில் வைத்து வழங்கி கௌரவித்தார்.

நேற்று முன்தினம் [ஞாயிறு] இரவு ஷெல் வீச்சுக்கு இலக்கான சாவகச்சேரித் தபால் அலுவலகத்துக்குச் சற்றுத் தொலைவில் உள்ள, இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடந்த முத்தமிழ் விழாவில் நேற்றிரவு அவர் மக்கள் முன் காட்சியளித்தார்.

அவரது திடீர் பிரசன்னம் கண்டு அங்கு திரண்டிருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். தலைவரை நேரில், முகத்துக்கு முகம் கண்ட உள்ளப் பூரிப்பில், மக்கள் உணர்ச்சி வசப்பட்டு பலவாறாகவும் வாழ்த்தொலி எழுப்பினார்கள்.

1987 ஆம் ஆண்டு சுதுமலையில் நடந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் திரு. பிரபாகரன் நேற்றையதினமே மீண்டும் பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்.

கூட்டம் ஆரம்பமாகு முன் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் ஒவ்வொருவராக கூட்ட மைதானத்திற்கு வந்துகொண்டிருந்தனர். திரு. பிரபாகரனும் வரக்கூடும் என்று மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

அவர் கூட்டத்தில் கலந்து கொள்வது அறிந்து முன்கூட்டியே தெரிந்துகொண்டநாமும் அவர் வரவைக் காத்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழரின் தேசிய தனித்துவம் எவராலும் அழிக்க முடியாதது!

### விருது வழங்கும் வைபவத்தில் பிரபாகரன் உரை

சாவகச்சேரி ஜூன் 11

தமிழீழ மக்களின் தேசி... ஏற்றுக் கொண்டாலும் சரி, மறுத்தாலும் சரி, எமது தேசிய தனித்துவமானது என்றும் அழிக்க முடியாத யதார்த்தமான அரசியல் உண்மை என்பதை நாம் உலகிற்கு சதா பிரகடனம்செய்து கொண்டே இருப்போம். தேசிய விருது என நாம் பட்டமளிப்பதும் இப்படியான ஒரு பிரகடனமே!

—இப்படிக் கூறினார் தலைவர் வே. பிரபாகரன்.

நேற்று தமிழீழ தேசிய விருதுகளை வழங்கி உரையாற்றுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார். தமது உரையில் அவர் மேலும் கூறியதாவது:-

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!,

நான் இன்று இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## காரைநகரில் வீடுகள், வேலிகளை படையினர் தினமும் எரிக்கின்றனர்

### 45 நாட்களின் பின்னர் வெளியே வந்தவர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 11

வீடுகளுக்கு வரும் இராணுவத்தினர் அங்கு இருக்கும் பெறுமதி வாய்ந்த பொருள்களைத் தூக்கி எடுத்துச் செல்கின்றனர், ஏனைய பொருள்களை அடித்து நொறுக்கி விட்டு வீடுகளை தீயிட்டுக் கொளுத்திவிடுகின்றனர். காரைநகரில் இவ்வாறு நாளாந்தம் நடக்கிறது.

—இவ்வாறு தெரிவிக்கிறார், காரைநகரில் இராணுவத்தினரிடம் இருந்து 45 நாட்களின் பின்னர் வெளியே வந்திருக்கும் கனகசபை சவுந்தராம்பிகை என்ற 55 வயதான பெண்மணி. இவர் காரைநகர் சிவன்கோவிலடியைச் சேர்ந்தவர்.

காரைநகர் இராணுவ நடவடிக்கையின் பின்னர் இவரும் மற்றும் இரு பே... களுமே இதுவரை வெளியில் வந்துள்ளனர்.

இவர்களை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு நேற்று யாழ்ப்பாணம் கொண்டு வந்து சேர்த்தது.

இடுப்பின் கீழ் இயங்காத நிலையில் ஒருவித பாரிசவாத நோயினால் பாதிக்கப்பட்ட திருமதி கனகசபை சவுந்தராம்பிகை உரிய பராமரிப்பும் கவனிப்பும் இல்லாததால் ... யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## தலைவர் பிரபாகரனிடம் விருது பெற்ற எண்மர்

சாவகச்சேரி, ஜூன் 11

தலைவர் வே. பிரபாகரனிடம் நேற்று தமிழீழ தேசிய விருது பெற்ற எண்மர் வருமாறு:-

★ கவிஞர் காசிஆனந்தன் [இலக்கியம்] — விருதை இவர் சார்பில் திரு. தேவர் பெற்றுக்கொண்டார்.

★ மறைந்த கா. சிவானந்தசுந்தரம் [மக்கள்பணி] — சகோதரி விருதைப் பெற்றுக் கொண்டார்.

★ மறைந்த கா. அருணாசலம் [சாகவ மதிக்காத வீரச்செயல்] — மகன் விருதைப் பெற்றுக்கொண்டார்.

★ மறைந்த ஆ. இராசரத்தினம் [போராட்ட பங்களிப்பு] — மனைவி விருதைப் பெற்றுக்கொண்டார்.

★ திரு. நடராசா [போராட்ட பங்களிப்பு]

★ திரு. இலஞானசுந்தரம் [பத்திரிகை]

★ திரு. திருநாவுக்கரசு [நாடகம்]

[6ஆம் பக்கம் பார்க்க]

## சிறப்பாக நிறைவு எய்திய 2 ஆம் கட்ட நிகழ்ச்சிகள்

தென்மராட்சி, ஜூன் 11

விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் நடத்தும் முத்தமிழ் விழா இரண்டாம் கட்ட இறுதி நாள் நிகழ்ச்சி சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலய கலையரங்கில் ஜன சமுத்திரத்தின் கரகோஷ ஒலியுடன் இனிது நிறைவெய்தியது.

இரண்டாம் கட்ட இறுதி நாள் நிகழ்ச்சியைக் கண்டு களிக்க சேம்பியன்பற்று, கிளிநொச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி, யாழ்ப்பாணம் பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் வாகனங்களிலும் சைக்கிள்களிலும் வந்து இருந்தனர்.

சாவகச்சேரி தபால் நிலைய வீதிச் சந்தியிலிருந்து பெருங்குளம் சந்தி வரை வீதி முழுவதும் வண்ணச் சரங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

இவ்வீதியில் உள்ள சந்திகளில் மணிச் சப்பறங்கள் வைக்கப்பட்டு அவற்றை நெருக்கட்டும் விதத்தில் வண்ண மின் விளக்குகள் பிரகாசித்தன.

நேற்றைய விழா நிகழ்ச்சிகளை விடுதலைப் புலிகளின் முன்னணி உறுப்பினர் பெம்மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

[6ஆம் பக்கம் பார்க்க]

## சாவகச்சேரிப் பகுதியில் இரவுநேரம் ஷெல்வீச்சு!

சாவகச்சேரி, ஜூன் 11

சாவகச்சேரிப் பகுதி ஞாயிற்றுக்கிழமை இரவு பலத்த ஷெல்வீச்சுக்கு இலக்கானது. இரவு சுமார் 8.30 மணி தொடக்கம் நள்ளிரவு ஒரு மணிவரை விட்டு விட்டு மொத்தம் பதினாறு ஷெல்கள் வந்து விழுந்தன.

பலாலியிலிருந்து ஏவப்பட்டதாகக் கருதப்படும் இச் ஷெல்கள் நுணாவில், மடுவில், சரசாலை, கல்வயல் ஆகிய பகுதிகளிலேயே அதிகமாக விழுந்து வெடித்தன.

இச் ஷெல்வீச்சினால் தபாலகம் ஒன்றும், வீடு, கடை, வான் என்பனவும் சேதமடைந்தன.

மீசாலையைச் சேர்ந்த நடு அருளம்மா [வயது 50] என்பவர் ஷெல் வீச்சுக்கு உக்கார தலையில் காயத்துக்குள்ளானார்.

இதே வேளை பலாலி முகாம் சுற்றுப் புறப்பகுதிகளான புன்னாலைக்கட்டுவன் அச்செழு, குப்பிளான் ஆகிய பகுதிகளை நோக்கியும் நேற்றிரவு ஷெல்கள் ஏவப்பட்டன.

ஞாயிறு பகல் பத்து மணியளவில் வீமன்காமம், தெல்லிப்பழை, டச்சுவீதிப் பக்கங்களிலும் ஷெல்கள் வந்து விழுந்ததாக அறியப்படுகிறது.

[அ-51-117-15-3-5]

### முச்சந்தி முரளி



மன்னிப்புச் சபைக்காரரை முதலிலை காரைநகருக்கு அனுப்பவேணும் கண்டியளோ......!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

**உடன் விற்பனைக்கு**

ஒரு புதிய பயனீர் [Pioneer] [Ladies] பெண்கள் துவிச்சக்கர வண்டி விற்பனைக்குண்டு ரூ 3500/- க்கு மேல் விற்கப்படும். இ. இராதாகிருஷ்ணன் கலாமன்றத்திற்கு முன்னால் கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு. [17090]

**தவறிவிட்டது**

707330309V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும், ஹோட்டல் முகாமைத்துவ அடையாள அட்டையும், கைப்பையுடன் கஸ்தூரியார் வீதியில் 08-06-91 இல் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் உதயன் காரியாலயத்தில் அல்லது இல 68, குறுக்குத் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தயவுசெய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [17153]

**அம்பாள் திருமண சேவை**

Accountants, Engineers ஆகியோருக்கு B Sc., A/L சித்தி அடைந்த அழகிய மணமகள் [Brides] தேவை. முற்பணம் 50/- ரூபா கட்ட வேண்டும். சின்னச்சாமிக் குருக்கள் சண்முகஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [16982]

**சோதிட மாந்திரீகம்**

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாக தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைச் சந்தியுங்கள். "சக்தி சரவணா" 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்பாக] தினசரி காலை 9-00 மணி தொடக்கம் 3-00 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [4128]

**வைத்திய நிலையம்**

வேலணையிலும், புளியங்கூடல் சந்தி சரவணை வீதியிலும் இயங்கி வந்த எமது வைத்திய நிலையம் தற்காலிகமாக கஸ்தூரியார் வீதி, 140 ஆம் [320] இலக்க கட்டடத்தில் இயங்கி வருகின்றது. டாக்டர் கந்தையா நவரத்தினம் 40, நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை [17074]

### வாழ்க்கைச் செலவு

கொழும்பு, ஜூன் 11

மே மாதத்துக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி அட்டவணை 1129 4 என்று புள்ளிவிவர மதிப்பீட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

### கிளாட்ஸ்ரோன் நாடுதிரும்பினார்

கொழும்பு ஜூன் 11

கொழும்பில் பணிபுரிந்து வந்த பிரிட்டிஷ் தூதர் டேவிட் கிளாட்ஸ்ரோன் ஞாயிறு தாயகம் திரும்பினார்.

உள்நாட்டு விஷயத்தில் தலையிட்ட காரணத்திற்காக திரு. கிளாட்ஸ்ரோனை இலங்கை அரசு விரும்பத்தகாத நபராக அண்மையில் பிரகடனம் செய்திருந்தது தெரிந்ததே. [இ-எ]

### படையினர் பரா வெளிச்சம்

காங்கேசன்துறை, ஜூன் 11

நேற்று முன்தினம் இரவு 7-30 மணி அளவில் காங்கேசன்துறை கீரிமலைப் பகுதியில் படையினர் பரா வெளிச்சக் குண்டுகளை ஏவினர். துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டன.

இதனை அடுத்து குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் வீச்சும் இடம்பெற்றது. [இ-68]

---

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





| | |
|---|---|
| வினாயகமூர்த்தி சதாசிவம் [இளைப்பாறிய சுகாதார பரிசோதகர்] | சதாசிவம் சிவானந்தமூர்த்தி |
| அன்னையின் மடியில்: 04 — 02 — 1922 | அன்னையின் மடியில் 04 — 05 — 1953 |
| தரணியின் மடியில்: 05 — 06 — 1986 | தரணியின் மடியில்: 11 — 03 — 1986 |

திதி: 11 - 06 - 1991

குல விளக்குகளே நீங்கள் அணைந்தீர்கள்
குமுறுகிறோம் உங்கள் நினைவால்
வேரோடு மரம் புரண்டு
வீதியிலே வீழ்ந்தது போல
வாழும் வீதியிலே எம்மை விட்டு
பாதியிலே சென்று விட்டீர்கள்
மின்னலென நீங்கள் மறைந்து
ஐந்தாண்டு சென்றிடினும்
உங்கள் உறவை மறப்போமா
மறக்கும் நெஞ்சம் உண்டோ

இவர்கள் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர், நண்பர்கள்.**

மூத்ததம்பியார் வளவு,
வதிரி, கரவெட்டி. [17097]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் செ. இளையதம்பி

[பிரபல வர்த்தகரும், மல்லிகா லொறி உரிமையாளரும்]

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 17 - 04 - 1933 | 13 - 05 - 1991 |

திதி: 12 - 06 - 1991

உங்கள் நினைவால் துயருறும்;

அம்மா, மாமா, மாமி, பிள்ளைகள்
மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

கரவெட்டி மத்தி,
கரவெட்டி. [17099]

---

## அறிவித்தல்

### கெயர் / யு. எஸ். எயிட் விவசாயத் திட்டம்

சென்ற 07-06-91 இல் கெயரினால் நடத்தப்பட்ட மேற்படி திட்ட அமுலாக்கல் நிறுவனங்களின் கூட்டத்தில் இதுதொடர்பாக இந்நிறுவனங்களால் அமுல் நடத்தப்பட்ட கடன் திட்டத்தை ரத்துச் செய்வதாக முடிவு செய்யப்பட்டது. இக்கடன் திட்டம் தொடர்பாக இதுவரை அறவிடப்பட்ட பணம் பயனாளிகளின் / சேமிப்பாகக் கொள்ளப்படும்.

ம. பத்திநாதன்,
பிரதி பிராந்தியப் பணிப்பாளர்,
அகில உலக கெயர்,
யாழ்ப்பாணம்.

[17153]

---

## தேவை

சுகாதார, மருத்துவப் பயிற்சி நெறிக்கு கிராமங்களில் கடமையாற்றுவதில் ஆர்வம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வெளிமாவட்டங்களில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பயிற்சிக்காலத்தில் உணவு, தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

| | |
|---|---|
| குறைந்த கல்வித்தகைமை | - க.பொ.த.சாதாரணதரம் |
| வயது | - 18 — 35 |
| விண்ணப்ப முடிவுத் திகதி | - 20 - 06 - 1991 |
| பயிற்சிக் காலம் | - 3 மாதம் |

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

செயலாளர்,
**தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,**
83/2 காங்கேசன்துறை வீதி, கொக்குவில்.

[16986]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### பொன்னையா சண்முகநாதன்

[இராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ் - வவுனியா]

| மண்ணுக்கு மகிழ்வூட்ட வந்தது: | விண்ணுக்கு மகிழ்வூட்ட விரைந்தது: |
|---|---|
| 28 - 04 - 1931 | 12 - 05 - 1991 |

பண்பிற்கோர் இலக்கணமாய், பாசத்திற்கோர் உறைவிடமாய், உலகிற்கோர் உத்தமராய், வீட்டிற்கோர் விளக்காய்த் திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து நாட்கள் முப்பத்தொன்று சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களில் அணையாத தீபமாய் என்றும் ஒளிரும்.

தங்கள் ஆத்மா சாந்தியடைய அனுதினமும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தும் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

"அன்னை இல்லம்",
புங்குடுதீவு - 02 [17085]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னமடுவில் சிக்கியிருந்த வயோதிப தம்பதியர் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

இராணுவ நடமாட்டம் உள்ள சரவணை சின்னமடுப் பகுதியில் சுமார் 44 தினங்கள் சிக்கி இருந்த வயோதிபர்களான கணவனும் மனைவியும் நேற்று உறவினர்களால் மீட்கப்பட்டு யாழ். நகர் கொண்டு வந்து சேர்க்கப்பட்டனர்.

சின்னமடுவைச் சேர்ந்த ரோணான் செபமாலை [வயது 71], வி. ஞானக்கலம் [வயது 65] ஆகியோரே மீட்கப்பட்டவர்கள் ஆவர்.

போதிய உணவின்றி உடல் நிலை பாதிக்கப்பட்ட நிலையில் இவர்கள் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சின்னமடுப் பகுதியில் ஏப்ரல் 26 ஆம் திகதி இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது தமது வீட்டில் இருந்து வெளியேறாமல் இருந்த இந்த இருவரும் கேட்கும் சக்தியையும், பார்க்கும் சக்தியையும் இழந்த நிலையில் சரியான சுயநினைவின்றிக் காணப்படுகின்றனர்.

சின்னமடுவில் இவர்கள் தங்கி இருந்த வீட்டுக்கு படையினர் வரும்போதெல்லாம் தம்மைச் சாக்கினால் மூடிக்கொண்டே இவர்கள் தப்பினர் என்று சின்னமடுவில் இருந்து இவர்களை யாழ் நகர் கொண்டு வந்தவர்கள் தெரிவித்தனர்.

சின்னமடுவில் இவர்கள் தங்கி இருந்த வீட்டுப் பக்கம் சென்ற ஒருவர் இவர்களைக் கண்டு வேறு ஒரு வீட்டுக்கு அழைத்துச் சென்று தங்க வைத்துவிட்டு, யாழ்ப்பாணத்தில் உள்ள உறவினர்களுக்கு தகவல் கொடுத்தாராம். அதனை அடுத்தே உறவினர்கள் இவர்களை மீட்டனர்.

இவர்கள் இடம் மாற்றப்பட்ட இரண்டொரு தினங்களில் இவர்களது வீடு படையினரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதாகவும் அறியவருகிறது. [இ-15]

# அமேசன் கப்பலில் மண்ணெண்ணெய்

யாழ்ப்பாணம், ஜூன் 11

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வந்து சேரவிருக்கும் "அமேசன்" கப்பலில் பெரும் அளவில் மண்ணெண்ணெய் வரவிருக்கிறது.

யாழ் செயலகத்துக்கு 240 பரலும், வெயர் அமைப்புக்கு 600 பரலும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு 137 பரலும், பனை அபிவிருத்திச் சபைக்கு 100 பரலும் மண்ணெண்ணெய் வர இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ-8]

# காரைநகரிலிருந்து மூவர் நேற்று கூட்டிவரப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜூன் 11

காரைநகரில் இராணுவத்தினரிடம் சிக்குண்டு கடந்த 45 நாட்களாகத் தவித்த மூன்று நோயாளர்களை, செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் கொண்டு வந்து சேர்த்தனர்.

படை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து —

வலந்தலையைச் சேர்ந்த பொன்னம்மா சந்தையா [84 வயது], அவரது மகனான தங்கமுத்து கனகசபாபதி [62 வயது], சிவன்கோவிலடியைச் சேர்ந்த திருமதி கனகசபை சவுந்தராம்பிகை ஆகிய மூன்று பேர்களுமே செஞ்சிலுவைச் சங்கத்தினரால் கூட்டி வரப்பட்டனர்.

இவர்கள் காரைநகரில் இருந்து கடற்படைப் படகு மூலம் பருத்தித்துறைக்குக் கூட்டி வரப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு நேற்றுக் காலை பத்து மணியளவில் கொண்டு வந்து சேர்க்கப்பட்டனர்.

காரைநகரில் இராணுவ நடவடிக்கை நிகழ்ந்தபின்னர், 45 நாட்களின் பின்னர் முதன் முதலில் வெளியே வந்துசேர்ந்தவர்கள் இவர்கள் மூவருமே. [அ-3]

# கொழும்பில் வாந்திபேதி

கொழும்பு, ஜூன் 11

கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட நோயாளி ஒருவர் வாந்திபேதி [கொலரா] நோயினால் பீடிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதைத் தொடர்ந்து வாந்திபேதித் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பொது மக்களை சுகாதார அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

# கலைஞருக்கும் புலிகளுக்கும் இடையே இரகசியப் பேச்சு!

## சுப்பிரமணியம் சுவாமி கூறுகிறார்

சென்னை, ஜூன் 11

திரு மு. கருணாநிதிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே வெளியே தெரியாத இரகசியப் பேச்சுவார்த்தை பல தடவைகள் நடைபெற்றதாகத் தெரிவிக்கும் தகவல்கள் மத்திய அரசிடம் உள்ளன.

இந்திய மத்திய சட்டத்துறை அமைச்சர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி மேலும் சொன்னதாவது:

ஈ. பி. ஆர். எல். எப் தலைவர் பத்மநாபா உள்ளிட்டு 17 பேர் கொலையுண்ட சம்பவம் குறித்து பாராமுகமாக இருந்தார் கருணாநிதி.

விடுதலைப் புலிகள் உட்பட எந்த வெளிநாட்டுச் சக்தியும் இந்திய நாட்டவரைத் தாக்கினால் அந்தச் சக்திமீது நடவடிக்கை எடுக்க இந்தியாவுக்கு உரிமை உண்டு.

அதன் தொடர்ச்சிதான் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டது.

இப்படி டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி சொன்னார். [இ-எ]


I. D. P.

கம்பியூட்டர் பயிற்சி நிலையம்

பிரதான வீதி, மானிப்பாய்.

பதவி வெற்றிடம்

போதனாசிரியர் (Lecturers)

BASIC, COBOL, d BASE III +, LOTUS 123 கற்பிக்கும் அனுபவம் வாய்ந்தவர்கள் இருவர்.

எழுதுவினைஞர் (Clerk)

மானிப்பாய் மருத்துவ மனைக்கு ஒரு மைல் சுற்றாடலில் உள்ளவரும், G. C. E [O/L] படித்த ஆண் இனம், தமிழில் அழகான கையெழுத்துடைய ஒருவர்.

விண்ணப்பங்கள் 15 — 06 — 91 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

நேர்முகப்பரீட்சை 16 — 06 — 91 காலை 9-00 மணி

க. தளையசிங்கம்.
Managing Director

[சி-0047]



English Assistant Teachers

போட்டிப் பரீட்சைக்கான

துரித பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்:- 17-06-1991

Lectures By KANDIAH NAVARENDRAN

Fees Rs. 150/-

✶ விண்ணப்பப் பத்திரத்தையும் விவரக்கொத்தையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 14-06-91

மேலதிக விவரங்களுக்கு:

SCHOOL OF BUSINESS ADMINISTRATION

[O/L, R. தேவாலய மேற்குப் பக்கம்]

16, 3 ஆவது குறுக்கு வீதி,

யாழ்ப்பாணம்.

[சி/0100]


## காரைநகரில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வார். இவரது செவிப்புலனும் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது.

தன்னால் நடக்க முடியாததால் வீட்டிலேயே இருந்ததாகவும், வீட்டுக்கு அயலில் நடக்கும் சம்பவங்களைத் தன்னால் பார்க்கக் கூடியதாக இருந்ததாகவும் அவர் சொன்னார்.

அவர் தமக்கு நேர்ந்த கதி குறித்தும், அயலில் நடந்தவை குறித்தும் உதயனுக்குப் பின்வருமாறு தெரிவித்தார்:-

நான் வீட்டில் சிக்குண்டிருந்த 45 நாட்களில் ஒரு நாள் மட்டுமே இராணுவம் உணவு உதவி செய்தது. அதனைவிட வேறு எந்த வசதியும் செய்யவில்லை. அயலில் இருந்தவர்கள், தெரிந்தவர்கள் உதவிய நாட்களில் மட்டுமே சாப்பிட்டேன்.

சரியாகச் சொல்வதானால் கடந்த 45 நாட்களிலும் சாப்பிட்ட நாட்களை விடச் சாப்பிடாத நாட்களே அதிகம்.

இராணுவத்தினர் அடிக்கடி எங்கள் வீட்டுப் பக்கம் வருவார்கள். எனது வீட்டுக்கும் அடிக்கடி வந்தார்கள். எந்த வித உதவியும் செய்யவில்லை. ஆனால் வரும் போதெல்லாம் பெறுமதியான பொருள்களை எடுத்துச் சென்றார்கள். ஒரு நாள் வந்து எஞ்சியிருந்த பொருட்களை ஒன்றாகப் போட்டுக் கொளுத்தினார்கள். எனது வீட்டில் இப்போது சமையல் பாத்திரங்கள் கூட இல்லை. வீட்டில் நின்ற இரண்டு சேவல்களைக் கூட இராணுவத்தினரே பிடித்துச் சென்றனர்.

அயலில் உள்ள வீடுகளிலும் பெறுமதியான பொருள்களை எடுத்துக் கொண்டு வீடுகள், வேலிகளைக் கொளுத்தினர். நாளாந்தம் வீடுகள் அல்லது வேலிகள் எரிவதை வீட்டில் இருந்தவாறு என்னால் பார்க்க முடிந்தது.

எத்தனை வீடுகள் எரிக்கப்பட்டன என்பதை என்னால் மதிப்பிட முடியாது — என்றும் அவர் தெரிவித்த தொனியில் [illegible]

# மரண அறிவித்தல்கள்

## நாகமுத்து கனகசிங்கம் [N. K. சிங்கம்]

அராலி வடக்கைச் சேர்ந்த நாகமுத்து கனகசிங்கம் [இளைப்பாறிய பொறியியலாளர், இலங்கை போக்குவரத்துச் சபை] 9-6-91 ஞாயிறு அதிகாலை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், யுவராணி, விஜயசிங்கம் [சவூதி அரேபியா], யுகசிங்கம் [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தந்தையும், வரதராஜன், தவமணி [காரைநகர், ப. நோ. கூ. ச.] மாலதி [ஜேர்மனி] ஆகியோரின் மாமனாரும், தனுஷ்யா, ஜெய்ராம், கௌதமன், கெளசிகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 9-6-91 அராலியில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ப. வரதராஜன்
[மருமகன்]

வள்ளிவனம்,
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

[சி/0044]

## அண்ணாமலை பொன்னையா சண்முகராசா

யாழ்ப்பாணம் மின்சாரநிலைய வீதி 3 ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த அண்ணாமலை பொன்னையா சண்முகராசா [முன்னாள் ஸ்ப்ரன் விற்பனை முகாமையாளர், டைமன் தேயிலை கம்பனி உரிமையாளர்] 10-06-91 திங்கட்கிழமை நண்பகல் காலமாகிவிட்டார்.

இவர் வடிவாம்பிகை [யாழ். தொலைபேசி, பரிவர்த்தனை நிலையம்] அவர்களின் அன்புக் கணவரும், புங்குடுதீவைப் பிறப்பிடமாகக்கொண்ட காலம் சென்ற அண்ணாமலை - பொன்னையா, பொன்னையா செல்லக்கண்டு ஆகியோரின் மூத்த புதல்வனும், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சுப்பிரமணியம், செல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், S. ஜெகதீசன் [Norway], S ஜெயகாந்தன் [France] ஆகியோரின் அன்புத் தந்தையும், P. பாலச்சந்திரன் [யாழ். மாநகர சபை இளைப்பாறிய உத்தியோகத்தர்] கனகசபை-மங்கலேஸ்வரி, P கமலநாதன் [France], P. விமலநாதன் [France], கமலேஸ்வரி-பவானந்தன் [France], ஆகியோரின் அன்புச் சகோதரனும், முருகேசு - கனகசபை [Doctor], B. ஜெகதீஸ்வரி [இளைப்பாறிய ஆசிரியை, திருநெல்வேலி கன்னியர் மட ஆங்கில பாடசாலை], க பிறபதாம்பாள் [France], கை. பவானந்தன் [France] காலம் சென்ற பூபாலசிங்கம், ஞானாம்பிகை - தேவராசா, யோகாம்பிகை - ஸ்ரீகாந்தன் [முன்னாள் யாழ். தொலைபேசி பரிவர்த்தனை நிலையம்] நீலாம்பிகை பரராஜசிங்கம் ஆகியோரின் அன்புமைத்துனரும், T. தேவராஜா [C. T. B] P ஸ்ரீகாந்தன் [நுணாவில்], பரராஜசிங்கம் ஆகியோரின் சகலனும், பிரசாந்தி, உஷாந்தி, பிரசன்னா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், கெளரி, இவகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [11-06-91] செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு 72, [30] பழம் றோட், கந்தர் மடம் யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்:
பொ. பாலச்சந்திரன்
[சகோதரர்]

72, [30] பழம் றோட்,
கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.

[16988]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிருபர்கள் தேவை

## செய்தித்தகவல் மையம்

செய்தித்தகவல் மையம், யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிராமசேவை அலுவலர் பிரிவுகள் தோறும் நிருபர்களை நியமனம் செய்து வருகின்றது. க. பொ. த சா/த அல்லது உ/த சித்தியடைந்த அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்தகைமையுடைய செய்தி சேகரிக்கும் ஆற்றலும், எழுத்தாற்றலும் கொண்டவர்கள் விரும்பத்தக்கது. நிருபர்களுக்கு போக்குவரத்துச் செலவுப்பட செய்தி தகவல்களுக்கான பணம் வழங்கப்படும். விண்ணப்பதாரிகள் தத்தமது பகுதிக்கிராமசேவை அலுவலரிடம் இருந்து உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

முக்கிய குறிப்பு:

பொதுமக்கள் தமது பிரச்சனைகள், பாதிப்புக்கள் குறித்து எழுத்து மூலம் நேரில் சமர்ப்பிக்கலாம்.

நிர்வாகி,
செய்தித்தகவல் மையம்,
கோப்பாய்.

[17186]

# I. D. P.

## கம்பியூட்டர் பயிற்சி நிலையம்

பிரதான வீதி, மானிப்பாய்.

BASIC, COBOL d BASE III+, LOTUS 123, MS DOS Operating System ஆகிய பயிற்சி நெறிகளுக்கான அடுத்த புதிய பிரிவுகள்

சனிக்கிழமை 15 - 06 - 91 ஆரம்பம்

| | |
|---|---|
| காலை | 9-00 — 11-00 |
| | 11-00 — 1-00 |
| மாலை | 2-00 — 4-00 |
| | 4-00 — 6-00 |

மாணவர்கள் 15 - 06 - 1991 இற்கு முன் பதிவு செய்து கொள்ளவும்.

க. தளையசிங்கம்,
Managing Director

[இ-0045]

# ஓராண்டு நினைவலைகள்



அமரர்

## கிருஷ்ணபிள்ளை வவீந்திரநாதன்

(வசந்தன்)

மண்ணில்: 15 — 01 — 1973 விண்ணில்: 23 — 05 — 1990

திதி: 11 — 06 — 1991 செவ்வாய்க்கிழமை

வசந்தம் வந்தது போல் வசந்தன் நீ வந்தாய்
இசைந்து நாமெல்லாம் இன்புற்றே இனிதிருக்க
மலர்ந்த முகம் காட்டி, மாணவர் தலைவனாகி - இம்
மண் இறக்கும் விளையாட்டு வீரனாகி
மக்களுக்கும் தொண்டனாகி - எம்
மனை சிறக்க மகிழ்வு கண்டாய்
அனைவரையும் அதிர்ச்சிக்குள் வைத்து
அகாலமதில் உன்னை
ஆண்டவனும் அழைத்ததென்ன?
ஆறாத துயர் மாறாது வசந்தனின் மதிவதனம்
வசந்தனின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

பாசம் நிறை - அப்பா, அம்மா,
பெரியம்மா, சகோதரர், சகோதரிகள்,
மாமாமார், மாமிமார், மைத்துனர்மார்,
மைத்துனிமார், பெறாமக்கள், மருமக்கள்,
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்

20, இராமநாதன் வீதி,
நாவன்மார்கட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[17155]

## சமயாசமய ஊழியர் நிரந்தரம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ். போதனா வைத்தியசாலையில் சமயாசமய ஊழியர்களாக கடமைபுரிந்தவர்களில் 16 பேர் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் நேற்று முன்தினம் வைத்தியசாலை நிர்வாகத்தால் வழங்கப்பட்டன.

1987 ஆம் ஆண்டு 69 பேர் சிற்றூழியர்களாகவும், 8 பேர் சுத்திகரிப்புத் தொழிலாளிகளாகவும் சமயாசமய அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களிலேயே 16 பேருக்கு தற்போது நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

[இ - 15]

## சுன்னாகத்தில் சாரதா சேவாச்சிரமம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தின் கிளை ஒன்று சுன்னாகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சூராவத்தை முத்துமாரி அம்மன் கோவிலுக்குச் சமீபமாக உள்ள ஓர் இல்லத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தக் கிளை இப்பகுதியில் சமய சமூக பணிகளில் ஈடுபடும்.

திறப்புவிழாவன்று அன்னை சாரதாதேவியின் திருவுருவப் படம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து விசேட பூசையும், பஜனையும் இடம்பெற்றன.

திறப்புவிழா நிகழ்ச்சியில் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி மகேஸ்வரி சுகர் ..... திருச்சிற்றம்பலம், மயிலணி சைவ மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ். துரைசிங்கம், அதே பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர்கள், மற்றும் சைவப் பெரியார்கள் பலரும் கலந்துகொண்டனர். [அ]

## பயிற்சி அளிக்க போதனாசிரியர்

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ் மாவட்டத்தில் சமையாற்றும் பயிலுநர் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க 30 போதனாசிரியர்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர்.

தொலைக் கல்விப் பிரிவால் மேற்கொள்ளப்படவிருக்கும் இந்தப் பயிற்சிக்குத் தேவையான போதனாசிரியர்களை நியமிக்கும் வேலைகள் யாழ். கல்வி அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[இ-3]

## தெரிவான மாணவருக்கு கடிதம்

1990/91 கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவு பூர்த்தியடைந்துவிட்டது.

தெரிவு செய்யப்பட்ட மாணவருக்கு அதுபற்றிய தகவல் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தெரிவு தொடர்பாகப் பாதிக்கப்பட்ட மாணவர். பல்கலைக் கழக அனுமதி தொடர்பான மேன்முறையீட்டு விசாரணைக் குழுவின் செயலாளருக்கு இம்மாதம் 21ஆம் திகதிக்கு முன் மனுச் செய்ய வேண்டும் என பல்கலைக் கழக மானிய ஆணைக் குழு அறிவித்துள்ளது.

## தொடர்பு கொள்ள கோரிக்கை

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்து இடம் பெயர்ந்த பின்னர் ஓய்வு பெற்ற தமிழ் ஆசிரியர்கள் கல்வி அமைச்சின் தமிழ் ..... தொடர்பு கொள்ளும்படி கோரப்பட்டுள்ளனர்- [இ-எ]

# முதலாம் ஆண்டு ஞாபகார்த்தம்



இம்மை: 28-8-1908

மறுமை: 11-6-1990

அமரர்

## அருணாசலம் எட்வேட் இரத்தினசாமி

(ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர், சமாதான நீதிவான்)

"இயேசுவின் கரத்திலே தீங்கற்று ஜீவித்து
மாநேசரின் மறைவில் இன்பமாய் ஆறிக்
கொள்ளுங்கள்"

உங்கள் பிரிவால் துயருற்று
உங்களை அன்புடன் நினைவுகூரும்;

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'ஜோய் கொற்றேஜ்'
சங்கானை.

[17091]

# முதலாம் ஆண்டு நினைவு நாள்



கல்வளையில் கண்டு களித்தது: 25 — 10 — 1945

கல்லோயாவில் காணாது கலங்கியது: 21 — 06 — 1990

## மாணிக்கவாசகர் - யோகிராஜ்

(Head Gaurd - புகையிரத திணைக்களம், மட்டக்களப்பு)

கடமையே பெரிதென கல்லோயாவில் நின்றீர்
கயவர் கூட்டம் கூட்டிச் சென்றதோ - கொன்றதோ
கட்டுப்பாட்டுடன் வளர்த்த
செல்வங்கள் பாதிவழியிலே
கட்டியவள் கனவு கலையுமுன்னே
காலனவன் கவர்ந்து செல்ல மனந்தான் வந்ததோ

மனைவி, மக்கள், தாய்,
உறவினர்கள்.

கல்வளை,
சண்டிலிப்பாய்.

[17094]

# மரண அறிவித்தல்

## உலகநாதன் இராசசுப்பையா

(ஓய்வுபெற்ற சுகாதாரப் பரிசோதகர்,)
தெல்லிப்பளை கோண்டாவில்

கோண்டாவில் நெட்டிலிப்பாயைச் சேர்ந்த உலகநாதன் இராசசுப்பையா 8-6-91இல் காலமானார். இவர் பாக்கியத்தின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம் (கனடா), பிரேமானந்தன் (கனடா), கருணானந்தன் (கனடா), சந்திரகுமார் (கனடா), திருமதி த. தனலட்சுமி, Dr. P. விஜயலட்சுமி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ப. தர்மபதி, Dr ந. புவனேந்திரன் (லண்டன்), திருமதி பா. தனேஸ்வரி (கனடா), திருமதி P செல்வராணி, திருமதி க. கலாஜினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்வன் பா. தர்சன், செல்வன் பா. டினேஸ், செல்வன் P. தர்சுதன், செல்வன் P சஞ்சீவ், செல்வி க. சர்மிளா, செல்வி க. திசா ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 9-6-91இல் காரைக்கால் மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திருமதி பாக்கியம் இராசசுப்பையா,
ப. தர்மபதி

[C/0089]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஒரு வருட கால யுத்தத்தின் விளைவு

தமிழ் மண்ணில் உக்கிரப் போர் தொடங்கி ஜூன்று இரண்டாவது ஆண்டு தொடங்குகிறது. நேற்றுடன் ஒரு வருடம் முடிவடைந்து விட்டது.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசியல் வழியையே நாடி நிற்பதாக, வெளியில் தந்துரைகளும் சித்தாந்தங்களும் பேசி வந்த அரசாங்கம் இராணுவத்தின் விருப்பத்துக்கு உடன்பட்டு இராணுவ வழியை நாட முடிவு செய்தது. உத்தியோகபூர்வமாக யுத்தத்தையும் பிரகடனம் செய்தது.

கடந்த ஒரு வருட காலமாக பெரும் பணச் செலவில் புதிது புதிதாக ஆயுதங்களும், விமானங்களும், கப்பல்களும் வாங்கி யுத்தத்தைத் தீவிரப்படுத்தியது. தமிழர்களை அந்நியர்களாகக் கருதி அடாத்தாகவும், அக்கிரமமாகவும் நடந்து கொண்டது.

ஒரு வருடமாக யுத்தம் புரிந்து, தமிழர்களைக் கொன்று, அவர்களை இம்சைப்படுத்தி, பொருளாதாரத் தடை விதித்து அரசாங்கம் சாதித்தது என்ன? எதையும் சாதிக்கா விட்டாலும் அரசினால் ஏதாவது முடிவுக்காவது வரமுடிந்ததா?

நாட்பட்டுப் போன தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வா அல்லது இராணுவத் தீர்வா உகந்தது என்பது குறித்து அரசினால் இன்னும் முடிவு செய்ய முடியவில்லை. கடந்த ஜூன் மாதம் யுத்தத்தைப் பிரகடனப்படுத்திய போது இருந்த அதே குழப்ப நிலையில் தான் அரசாங்கம் இன்னமும் இருக்கிறது!

அது ஒரு புறமிருக்க —

தமிழர்களின் விடுதலை வேட்கையைத் தானும் அரசாங்கத்தினால் குறைக்க முடிந்ததா? அரசு நினைத்தது ஒன்று நடந்தது வேறொன்று! கடந்த ஒரு வருட காலத்தில் தமிழர்களின் விடுதலை உணர்வும், அடிமை நிலையைப் போக்குவதற்காக உழைக்கும் மனோதிடமும் தீவிரமடைந்துள்ளன. அரசு பொருளாதாரத்தடை விதித்ததால், தமது சுய பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும் என்ற விருப்பம் செயலில் மலிந்துள்ளது. போர்க்காலச் சூழ்நிலையின் எந்தவித தாக்கங்களுக்கும் ஈடு கொடுக்கப் பழகிவிட்டார்கள். இப்போதும், இனிமேலும் எதையும் தாங்கும் நெஞ்சுறுதியும் அவர்களிடம் மலையாகத் திரண்டு விட்டது.

ஆகவே அரசாங்கம் நடத்திய ஒரு வருட காலப் போர், தமிழர்கள் தங்கள் சுதந்திரத்துக்காக, உரிமைகளுக்காகப் போராடுவதற்கு அவர்களின் மனோபலத்தை வலுவடையச் செய்திருக்கிறது. அதனால் தனியரசு உரிமை வழங்காமல் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்ற நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது

காலத்தை இழுத்தடிப்பதன் மூலமோ, இராணுவ அட்டூழியங்கள், அத்துமீறல்கள், ஆக்கிரமிப்புகள் மூலமோ தாம் நினைத்த சலுகைகளை வழங்கித் தமிழர் பிரச்சினையைத் தீர்த்து விடலாம் என்ற அரசாங்கத்தின் ஆகாயக் கோட்டை உருப்பெறாது என்பதை இப்போதாவது அரசு உணர்ந்து கொண்டால் நல்லது. தமிழர்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டியவை என்ற திறந்த மனதுடன் இனியாவது அது நல்வழி நாட வேண்டும். ஒரு வருட கால யுத்தம் தந்த பாடம் அதற்கான உந்துதலைத் தருமானால் அதுவே பெரும் திருப்புமுனையாக அமையும்

### குறை ஊட்டம் காரணமாக

# சோகை நோயால் அகதிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன், 11

யாழ் மாவட்டத்தில் அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்கள் மத்தியில் குருதிச்சோகை என்னும் இரத்தக் குறைபாட்டு நோய் காணப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

முகாம்களில் உள்ளோரில் மூன்று வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் வளர்ந்தோர், கர்ப்பிணிப் பெண்கள் ஆகியோரிடமே இந்நோய் காணப்படுகிறது.

முகாமில் உள்ளோரில் 60 சதவீதமானவர்கள் இந்த நோய்க்கு ஆளாகியுள்ளனர் என்றும் — இவர்களில் பலரும் பெண்கள் என்றும் — முகாம்களில் சேவை புரிந்து வரும் வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மையில் அரியாலையில் உள்ள ஓர் அகதிமுகாமைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண் உயிரிழந்தது தெரிந்ததே. அந்தப் பெண்ணும் குருதிச் சோகை நோயினால் பீடிக்கப்பட்டிருந்தார் என்று தெரிய வருகிறது.

குறையூட்டத்தினால் ஏற்படும் நோயிலிருந்து விடுபட இன்றைய சூழ்நிலையில் இலைக்கறி வகைகளை உணவில் அதிகம் சேர்த்து உண்ணலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-5]

### உப வேந்தரை சிபாரிசு செய்ய

# யாழ். பல்கலை. கவுன்ஸில் சனியன்று கூடுகின்றது

யாழ். பல்கலைக்கழக உப வேந்தர் பதவிக்கு மூவரின் பெயரைச் சிபாரிசு செய்வது தொடர்பான பல்கலைக்கழக கவுன்ஸிலின் கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

உப வேந்தராகக் கடமையாற்றும் பேராசிரியர் அ. துரைராஜாவின் தற்போதைய பதவிக் காலம் ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.

பல்கலைக்கழக கவுன்ஸில் சிபாரிசு செய்யும் மூவரில் ஒருவரை உப வேந்தராக ஜனாதிபதி நியமிப்பார்

[உ-3]

### சனி அரைநாள் ஞாயிறு முழு நாள்

யாழ் மாவட்டத்தில் சனிக்கிழமைகளில் அரைநாளும், ஞாயிற்றுக் கிழமைகளில் முழு நாளும் வர்த்தக நிலையங்கள் மூடப்படும்.

யாழ். வர்த்தகர் சங்கச் செயலாளர் திரு. எஸ். நமசிவாயம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார். [இ-3]

### புதன்கிழமைகளில் மட்டும்

யாழ்ப்பாணம், ஜூன், 11

மரணமுற்றோர் அல்லது காணமுற்றோர் தொடர்பான அலுவல்களுக்கு யாழ். செயலகத்தின் புனர் வாழ்வுப் பகுதிக்கு வருவோர் புதன் கிழமைகளில் மட்டும் வருமாறு செயல் திட்டப் பணிப்பாளர் திரு செ. பத்மநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார் [இ]

# ★ முத்தமிழ் விழா ★
## 6 ஆம் நாள் நிகழ்ச்சிகள் (11 - 06 - 1991)

இடம்: நெல்லியடி மாவீரர் கலை அரங்கம்

நேரம்: பிற்பகல் 5 30 மணி

### நிகழ்ச்சிகள் விவரம்

★ மங்கள இசை:

நாதஸ்வரம்:

கலாரத்னர் திரு. என். கே. கணேசன்
திரு. ஆர். சண்முகதாஸ்

★ தமிழீழ விடுதலைப்புலிகளின் - திறப்புரை:

★ சிறப்புரை: பேராசிரியர் துரைராஜா [துணை வேந்தர், யாழ். பல்கலைக்கழகம்]

★ கவியரங்கம்:

பொருள்: கேள்வி - பதில்
தலைமை: காரை செ சுந்தரம்பிள்ளை
கேள்வி: கவிஞர்கள் ஜெ. சி ஜெயசீலன்
நாக. சிவசிதம்பரம்
பதில்: கல்வயல் வே. குமாரசாமி
சா. வே. பஞ்சாட்சரம்

★ குழுப்பாடல்:

இராமநாதன் நுண்கலைப் பிரிவினர் வழங்கும்;

★ 'வாத்ய ப்ருந்தா'

மீசாலை கலை, பண்பாட்டுக் குழுவினரின்.

★ 'விடிவை நோக்கி' நாட்டிய நாடகம்

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரின்:

★ போர்க்காலப் பாடல்கள்:

மெல்லிசை நிகழ்வு

# உண்மையான குற்றவாளிகளை கண்டறிய கோருகிறார் கருணாநிதி

சென்னை, ஜூன் 11

ராஜீவ் காந்தி கொலைச் சம்பவத்தில் ஈடுபட்ட உண்மையான குற்றவாளிகளை கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டும்.

தூத்துக்குடியில் நேற்று முன்தினம் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி முன்கண்டவாறு சொன்னார்.

# தமிழீழ தேசிய விருது பெறுவோர்

இந்த ஆண்டு எட்டுப் பேர் தமிழீழ தேசிய விருது வழங்கப்பட்டு விடுதலைப் புலிகளினால் நேற்று கௌரவிக்கப்பட்டனர்.

அவர்களில் மூவர் பற்றிய விவரங்கள் நேற்றுப் பிரசுரமாகி இருந்தன. இன்று மேலும் மூவர் பற்றிய விவரங்கள் பிரசுரமாகின்றன.

### கலைஞானி அரும்பொருள், தொல்பொருள் பாதுகாப்பு

யாழ். மாவட்டம் குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட கலைஞானி தனித்து நின்று தமிழீழத்தின் அரும்பொருட் காட்சிகளாகச் செயற்பட்டு வருகிறார்.

கலைஞானி தமிழீழத்தின் பல பகுதிகளிலுமிருந்து சேகரித்த பண்டைய நாணயங்கள், கலைப்பொருள்கள், தொல்பொருள்கள், பழைய ஏட்டுச்சுவடிகள், கையெழுத்துப்படிகள் [பிரதிகள்] என்பவற்றையெல்லாம் தனது ஆற்றலுக்கு மீறிய வகையில் பேணிப் பாதுகாத்து வருகிறார்.

அவர் தேடி வைத்திருக்கும் அருங்கலைப் பொருள்களை வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் பல இலட்சம் ரூபாவுக்கு விலை பேசிய பொழுது கோடியாகக் கொடுத்தாலும் சம்மதியேன் என்று அடித்துக் கூறிவரர்.

சொந்த இ[illegible] சதியோ, அன்றி நிலையாக வசிப்பதற்கு கட்டட வசதியோ இல்லாத நிலையிலும் அனைவரும் வியக்கும் வகையில் தொல்கலைப் பொருள்களைச் சேகரித்துப் பேணி வருகிறார் என்றால் தமிழனின் உண்மையான அரிய கலைப்பொருள்கள் தமிழீழத்தை விட்டு வெளியே செல்லக்கூடாது என்பதில் அவர் கொண்டுள்ள உறுதிப்பாடே காரணியாகும்.

### நடராசா போராட்டப் பங்களிப்பு

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட காளிக்குட்டி நடராசா என்ற நடேசண்ணர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன் உறுதியான பங்களிப்பின் மூலம் மக்கள் மனதில் நிறைவாக நிற்பவர்.

விடுதலைப் புலிகளுக்கு உதவிகள் புரிந்தமைக்காக ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் இவரது மைத்துனர் இருவர் கொலைப்பட்ட போதிலும், இந்திய இராணுவத்தினரால் இவரது குடும்பம் பல அல்லல்களுக்கு உள்ளாக்கப்பட்ட போதிலும், எதுவித கலக்கமோ அல்லது தயக்கமோ இன்றி தொடர்ந்தும் விடுதலைப் புலிகள் இயக்க வீரர்களுக்கு உறுதுணையாக நிற்பவர்

பெரும் இராணுவ முற்றுகையில் விடுதலைப்புலி இயக்க வீரர்கள் சிக்கி வெளியே வரமுடியாதிருந்த வேளைகளில் அவர்களின் உணவுத் தேவைகளுக்காக [illegible] வந்தும் வெளியே தகவல் சேகரித்தும் பல வழிகளால் போராட்டத்துடன் இணைந்து நிற்கிறார்.

மேலும் அவரது மைத்துனர் இருவர், அவரது மூத்த மகன் ஆகியோர் இயக்க முழுநேர உறுப்பினர்களாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் வேளையிலும், தன்னையும் முழுநேர இயக்கப் பணிக்கென அர்ப்பணித்துள்ளார். அவரது குடும்பமும் முற்று முழுதாக இயக்கப் போராளிகளுக்கு உறுதுணையாக இருந்து வருகிறது.

### காசி ஆனந்தன் இலக்கியம்

மட்டக்களப்பு மாவட்டம் அமிர்தகழியைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர் காசி ஆனந்தன் சிறந்த போராட்ட இலக்கியங்களைப் படைத்து தமிழுலகம் போற்றுகின்ற உணர்ச்சிக் கவிஞராகத் திகழ்ந்து வருகிறார்.

அவர் படைத்த பாடல்களில் பெரும்பாலானவை தமிழுரிமை நெருப்புகளாகவே இருந்தன. 1965 இல் தமிழன் கனவு என்னும் காவியத்தின் மூலம் இன்றைய போராட்ட நிலையை, போராட்ட முறையை அன்றே அவர் கனவு கண்டு படம் பிடித்துக் காட்டுகிறார்.

எமது இயக்கம் உருவாகுவதற்கு நீண்ட காலத்துக்கு முன்பே,

மறவர் படைதான் தமிழ்ப் படை
குல மானம் ஒன்றுதான் அடிப்படை
வெறிகொண்ட தமிழர் புலிப் படை
அவர் வெல்வார் என்பது வெளிப்படை

என்று பாடி விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு தீர்க்கதரிசனத்தோடு அன்றே கட்டியம் கூறியவர் தமிழ் தேசிய விடுதலை உணர்வுகளையே அவர் பாடல்கள் முதன்மைப்படுத்தியதால் மிகச் சிறந்த இலக்கியவாதியாக இருந்தும் அவர் 'இலக்கிய உலகினால்' ஒதுக்கப்பட்டவர்.

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையை இலங்கைக்கு வெளியே [சென்னையில்] 1963 இல் முதன்முதல் உண்ணாவிரதப் போராட்டம் மூலம் எடுத்துச் சென்றவர். சிங்கள அரசின் அடிமைமுறையான குடியரசு அரசமைப்புச் சட்டத்தை ஏற்க மறுத்ததால் வகித்த பதவியைத் துறந்த தமிழுரிமைப் போரில் அவர் காட்டிய தீவிரம், நீண்ட கால சிறையையும், தலைமறைவு வாழ்க்கையையும் அவருக்குத் தந்தது. அவர் மட்டுமன்றி அவரின் தம்பியவர் இருவர் தங்கை ஆகியோரும் ஆண்டுக் கணக்காக சிங்களச் சிறையில் வாடியவர்கள்.

கவிஞர் அவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டிருக்கிறார். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்ட அவரின் தம்பி சிவஜெயம் என்ற மேஜர் சந்திரன் இந்தியப் படையினருடனான மோதலின் போது வீரமரணம் அடைந்தவர்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் கவிஞர் படைத்த இலக்கியங்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் சிறப்பான இடம் உண்டு. [தொடரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் தேசிய......

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
ந்த தேசிய நிகழ்வில் நேரடியாகப் பங்கு கொள்வதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தமிழீழ மண்ணின் விடிவிற்காக - தமிழீழ மக்களின் விமோசனத்திற்காக - தமிழீழ தேசிய பண்பாட்டின் மறுமலர்ச்சிக்காக - உழைத்தோரும், உழைத்து வருபவர்களுமான உன்னத - மனிதர்களை உண்மையான மண்ணின் மைந்தர்களை - மதிப்பளித்துக் கௌரவிப்பதற்கு எனக்கு இந்தச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் பெருமைப்படுகிறேன்.

### தமிழனின் பண்பாடு

நற்பணியாற்றும் நல்ல மனிதர்களுக்கு மதிப்பளிப்பதும் கௌரவம் செலுத்துவதும் தமிழனின் பண்பாடு. இந்த சிறிய மரபுக்கு ஏற்ப, இந்தச் சிறப்பு வைபவத்தை ஒழுங்கு செய்த எமது இயக்கத்தின் கலை பண்பாட்டுக் கழகத்தினருக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழீழ தேசத்தின் அதியுயர்ந்த கௌரவமாக தேசிய விருது வழங்கி இங்கு கௌரவிக்கப்படுபவர்களை நாம் மாமனிதர்கள் என மதிப்பளிக்கிறோம். ஏனென்றால் இவர்கள் அனைவரும் அற்புதமான இலட்சியவாதிகள்; இனப்பற்றும் நாட்டுப்பற்றும் உடைய தேசாபிமானிகள்; சுயநல வாழ்வின் குறுகிய வட்டத்திற்கு அப்பால் நின்று, சமூக நலத்திற்காக சேவையாற்றிய அபூர்வ மனிதர்கள். இவர்களது அறிவாற்றல், படைப்பாற்றல், செயலாற்றல் அனைத்துமே தமிழீழ சமூகத்தின் மேன்மைக்கு உரமூட்டுவதாக அமைந்திருக்கின்றன. இவர்களது பணி மேலும் தொடரவேண்டும்; இவர்களது தொண்டு மேலும் சிறக்க வேண்டும். இதனால் தான் இவர்களுக்கு பெரும் மதிப்பளித்து, தேசிய விருது வழங்கி கௌரவிக்கத் தீர்மானித்தோம்.

### தேசிய விருது என அழைப்பது ஏன்?

இந்தக் கௌரவப் பரிசளிப்பை "தேசிய விருது" என நாம் அழைப்பதில் அர்த்தமும் முக்கியத்துவமும் இருக்கத்தான் செய்கிறது.

தமிழீழ மக்களாகிய நாம் ஒரு தேசிய கட்டமைப்பைக் கொண்டவர்கள்.

வரலாற்று ரீதியாக நாம் ஒரு தேசியமாக வாழ்ந்து வந்தோம்; தேசியமாகவே வாழ்ந்து வருகிறோம்; தேசியமாகவே வாழப்போகிறோம்.

எமது தேசியத்தை எதிரியானவன் ஏற்றுக் கொண்டாலும் சரி ஏற்றுக் கொள்ள மறுத்தாலும் சரி எமது தேசிய தனித்துவமானது என்றும் அழிக்கமுடியாத, யதார்த்தமான வரலாற்று உண்மை என்பதை நாம் உலகிற்கு சதா பிரகடனம் செய்து கொண்டே இருப்போம். தேசிய விருது என நாம் பட்டமளிப்பதும் இப்படியான ஒரு பிரகடனமே.

பிரத்தியேக தேசியத் தொண்டு ஆற்றிய சிலருக்கு இன்று தேசிய விருது வழங்கி கௌரவிக்கிறோம். ஆண்டுதோறும், முத்தமிழ் விழாவின் முக்கிய நிகழ்வாக, இந்த தேசிய பரிசளிப்பு வைபவம் இடம்பெறும். ஆண்டுதோறும் மாமனிதர்கள் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்படுவார்கள். இந்தத் தேசிய விருது அளிப்பிற்கு ஒரு சில தேசபக்தர்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் ஒட்டுமொத்தத்தில் இந்தப் பரிசளிப்பு எமது மக்கள் அனைவருக்கும் வழங்கப்படும் கௌரவமாகவே கருதப்பட வேண்டும்.

எமது மக்கள் போற்றப்பட வேண்டியவர்கள்; கௌரவிக்கப்படவேண்டியவர்கள்; தேசிய போராட்டத்தில் மக்களின் பங்களிப்பு சாதாரணமானதல்ல. அவர்களது பங்களிப்பு அளப்பரியது என்றுதான் சொல்வேன். இலைமறைகாயாக இருந்து விடுதலைப் போராட்டத்திற்கு தோள் கொடுத்து வரும் எமது எண்ணற்ற ஆதரவாளர்களையும் அனுதாபிகளையும் மனவுறுதி படைத்த மாமனிதர்கள் என்றுதான் அழைக்கவேண்டும்.

### மக்கள் சுமக்கும் பழு

நீண்டகாலமாகவே போராட்டத்தின் பெரும் பழுவை பொதுமக்களே சுமந்து வருகிறார்கள்.

சாவும் அழிவும், பசியும் பட்டினியும், இரத்தமும் கண்ணீருமாக எமது மக்கள் எதிர்கொண்ட தாங்கொணாத் துன்பத்தை சொற்களில் சித்தரிக்கமுடியாது.

உலகின் எல்லா விடுதலைப் போராட்டங்களிலும் ஒடுக்குமுறையின் நெருப்பில் குளிப்பது பொதுசனங்களே. ஏனென்றால், அடக்குமுறையாளர்கள் போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தைவிட, பொதுமக்களின் ஆன்மீக உறுதியை உடைக்க வேண்டும் என்பதில்தான் அதீத அக்கறை காட்டுகிறார்கள். ஆனால் இந்த முயற்சிகள் ஒருபோதும் வெற்றியளிப்பதில்லை.

மக்களின் விடுதலை உணர்வை அடக்குமுறையால் அழித்துவிட முடியாது. உலக வரலாறு பகரும் உண்மையிது. ஏனென்றால், விடுதலையுணர்வே மனித ஆன்மாவின் சாரமாக, உயிர்மூச்சாக இயங்குகிறது. மனித வரலாற்றை இயக்கும் மகத்தான சக்தியும் அதுவே.

சிங்களப் பேரினவாத அடக்குமுறையானது எமது மக்களுக்கு சாவையும் அழிவையும், தாங்கொணாத் துயரையும் கொடுத்தபோதும் என்றும் இல்லாதவகையில் தேசியப் பற்றுணர்வையும், சுதந்திர தாகத்தையும் தூண்டிவிட்டிருக்கிறது. தமிழரின் தேசிய ஆன்மாவை விழித்தெழச் செய்திருக்கின்றது.

இன்று நாம் கொண்டாடி வரும் இந்த முத்தமிழ் விழா எமது மக்களின் தேசிய எழுச்சியின் அபாரமான வெளிப்பாடு என்றே சொல்லவேண்டும். போராட்ட சூழலில், எறிகணைகளின் எதிரொலியில் போர் முரசு கேட்கும் யுத்தகாலத்தில், சமுத்திரம் போல் திரண்டுவந்து பல்லாயிரம் மக்கள் முத்தமிழ் விழாவில் பங்குகொள்கிறார்கள் என்றால் அது எமது மக்களின் திடசங்கற்பத்தை-உறுதிப்பாட்டை- சுதந்திர அறைகூவலை - தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

இந்த சுதந்திர அறைகூவல் எமது எதிரியின் காதுகளுக்கு எட்டாமல் இல்லை. சீற்றம் கொண்ட பூகம்பத்தின் குமுறலாக எழும் எமது இனத்தின் எழுச்சிக் குரலை சிங்கள தேசமும், சர்வதேச சமூகமும், அசட்டை செய்ய முடியாது.

இலட்சியத்தால் ஒன்றுபட்டு, உறுதிபூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள்.

இந்த வரலாற்றின் படைப்பாக, எமது தேசிய மண், ஒரு சுதந்திர பூமியாக பிறப்பெடுக்கும் என்பது திண்ணம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

—என்று தெரிவித்தார்.

## அனல்காற்று 200 பேர் பலி!

பாகிஸ்தானில் அனல் காற்று காரணமாக கடந்த நான்கு தினங்களில் குறைந்தது 200 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

# நெல்லியடியில் முத்தமிழ்விழா

யாழ்ப்பாணம், ஜூன் 11

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டிலான முத்தமிழ் விழா, 3 ஆம் கட்டமாக நெல்லியடியில் இன்று ஆரம்பமாகின்றது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இதற்கென அமைக்கப்பட்ட மாவீரர் கலை அரங்கில் மாலை 5.30 மணிக்கு விழா ஆரம்பமாகும்.

விழாவை முன்னிட்டு நெல்லியடி நகர் விழாக்கோலம் பூண்டுள்ளது. சிவப்பு மஞ்சள் வண்ணக் கொடிகளும், வண்ணச் சரங்களும் வீதி எங்கும் காணப்படுகின்றன.

பிரதான சந்திகள் தோறும் அலங்கார வளைவுகள், அலங்காரப் பந்தல்கள், சப்பரங்கள் அழகாக அமைக்கப்பட்டுள்ளன. [இ-15]

## அரிப்பில் இராணுவம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள நானாட்டான் சிலாவத்துறை ஸ்ரீலங்கா முகாம்களில் இருந்து நேற்று முன்தினம் இரவு வெளியேறிய படையினர் அரிப்பு என்னும் இடத்தில் நிலைகொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடற்கரையோரமாக படையினர் வெளியேறி வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஆனையிறவில் பொம்மர் தாக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 11

ஆனையிறவு முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் நேற்று முன்தினம் ஞாயிறு மாலை 3 மணிமுதல் 4.45 மணிவரை ஆறு தடவைகள் பொம்பர் தாக்குதல்கள் இடம்பெற்றன.

அதே வேளை முகாமில் இருந்து குடியிருப்புகளை நோக்கி அன்று மாலை 6 மணி முதல் நேற்று அதிகாலை ஒரு மணி வரை ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றன. [அ-3-117]

## பனை விழுந்து இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

பனை மரம் முறிந்து விழுந்ததில் சிறுவன் ஒருவனும் பெண் ஒருவரும் காயம் அடைந்தனர்.

மாசியப்பிட்டியில் நேற்று 11 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றது.

மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்த குணலிங்கம் நிமலதாஸ் என்ற 6 வயதுச் சிறுவனும் வீட்டின் சொந்தக்காரரான விஜயரத்தினம் மேரி திரேசா (வயது 26) என்ற இளம் குடும்பப் பெண்ணுமே காயமடைந்தவர்களாவர். [இ-15]

## ஹெலியிலிருந்து துண்டுப் பிரசுரம்

தென்மராட்சி, ஜூன் 11

பெண் ஒருவரின் புகைப்படம் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் கடந்த ஞாயிறன்று சாவகச்சேரிப் பகுதியில் ஹெலியில் இருந்து வீசப்பட்டன.

ராஜீவ் கொலையில் சந்தேக நபராகக் கருதப்படும் ஒரு பெண்ணின் புகைப்படமே அது என்று தெரிவிக்கப்பட்டது.

## மட்டக்களப்பில் ஊரடங்கு

கொழும்பு, ஜூன்

மட்டக்களப்பு மாவட்டம் கோறளைப்பற்று, கோறளைப்பற்று வடக்கு மற்றும் ஏறாவூர் உதவி அரச அதிபர் பிரிவுகளில் நேற்று பிற்பகல் 1.30 மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

## அறுவர் பலி: படையினர் ஊர்ஜிதம்

கொழும்பு, ஜூன் 11

திருகோணமலை மாவட்டம் கல்லாறு என்னுமிடத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் ஆறு அரசப் படையினர் கொல்லப் [illegible] இராணுவ [illegible] நேற்று ஊர்ஜிதம் செய்தனர். [இ-எ]

## ஜீ. சீ. ஈ. விசேட பரீட்சை விடைத் தாள் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 11

நடைபெற்று முடிந்த ஜீ.சீ.ஈ. உயர்தர விசேட பரீட்சை விடைத்தாள்கள் நேற்று முன்தினம் இரவு கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

முன்னர் வினாத்தாள்கள் எடுத்து வரப்பட்ட விசேட லொறியிலேயே விடைத்தாள்களும் எடுத்துச் செல்லப்பட்டன. விடைத் தாள்களுடன் வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கமும் கொழும்பு சென்றுள்ளார்.

விடைத்தாள்களை ஏற்றிச் செல்லும் வாகனத்தினைத் தொடர்ந்து சிறுவர் பாதுகாப்பு நிதியப் பிரதிநிதிகளும் உடன் செல்கின்றனர். [க-6]

## ராஜீவ் கொலை தொடர்பாக
## தேடப்பட்டுவந்த மதிமுகன் கொழும்பில் பணிபுரிகிறார்!

கொழும்பு, ஜூன் 11

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக இந்தியப் புலனாய்வுத்துறையினரால் சந்தேகிக்கப்பட்ட இலங்கைத் தமிழரான அருதலிங்கம் மதிமகன் என்ற பொறியியலாளர் கொழும்பில் கட்டட நிர்மாண நிறுவனம் ஒன்றில் வேலை செய்து வருகின்றார் என்று அறிவிக்கப்படுகிறது.

27 வயதான மதிமகன் கடந்த மே மாதம் முதல் திகதியில் இருந்து தனது நிறுவனத்தில் வேலை செய்து வருவதாக அந்த நிறுவனத்தின் இயக்குநர் தெரிவித்திருக்கிறார்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக தாம் தேடப்பட்டு வருவதாக பத்திரிகைகளில் செய்தி வெளியானதைக் கண்ட மதிமுகன் தனது அலுவலகத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றாராம்.

தனது சட்டத்தரணியைச் சந்தித்த பின்னர் இந்தியத் தூதரகத்தில் நேரில் தெரியப் போவதாக அப்போது மதிமுகன் கூறியிருந்தாராம்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மதிமுகன் கொழும்பு றோயல் கல்லூரியில் படித்தவர். 1983 ஜூலை இனக்கலவரத்தைத் தொடர்ந்து அவர் சென்னை சென்று எஞ்ஜினியரிங் கல்வி பெற்றார். அங்கு சில காலம் வேலை செய்து விட்டு, பின்னர் கொழும்பு திரும்பினார்.

இதே வேளை—

மதிமுகன் கொழும்பில் விசாரிக்கப்பட்டதாகவும் ராஜீவ் கொலை தொடர்பாக அவருக்கு எதுவித சம்பந்தமும் இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டதாகவும் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

## வெள்ளத்துக்கு 60 பேர் பலி

பம்பாய், ஜூன் 11

பம்பாயில் கடந்த நான்கு தினங்களாக பெய்து வரும் பேய் மழை காரணமாக குறைந்தது 60 பேர் உயிரிழந்தனர்.

## சிறப்பாக.....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விடுதலைப் புலிகளின் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா திறப்புரையையும், திரு. க. சிவராமலிங்கம் உட்பட பலர் சிறப்புரைகளும் வழங்கினர்.

வயமாதுரி தானவாத்தியக் கச்சேரியும், எதிர்நீச்சல் நாட்டிய நாடகமும், கிளிநொச்சி கலை,பண்பாட்டுக் கழகத்தினரின் "வெற்றிக்களத்தில் வீரவேங்கை" என்ற நாடகமும் இடம்பெற்றன. [உ-117]

## தலைவர்....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ கலைஞானி (அரும்பொருள் தொல்பொருள் பாதுகாத்து பேணியமை)

இவர்களுக்கு ரூபா 25 ஆயிரம் ரொக்கப் பணமும், தங்கப் பதக்கமும் மற்றும் தலைவர் பிரபாகரன் கையெழுத்திட்ட சான்றிதழும் நிகழ்ச்சியில் வழங்கப்பட்டன.

வயதுபோய் உடல் தளர்ந்த நிலையில் மேடையில் அமர்ந்திருந்த பத்திரிகையாளர் இவ ஞானசுந்தரத்திற்கு. தாமே நெருங்கிப் போய் விருதுகளை வழங்கினார் திரு. பிரபாகரன். [உ-117]

## சாவகச்சேரி விழா......

இருந்தோம் எல்லோரும் வந்திறங்கியது போல அவர் வரவில்லை.

இரவு நேரம் சரியாக 8.15 மணிக்கு திரு. பிரபாகரன் மேடையின் பின்பக்கத் திரையிலிருந்து முறுவலித்த முகத்துடன், கம்பீரமாக நடந்து மேடையின் முன்னணிக்கு வந்தபோது "தலைவர் இதோ வந்துவிட்டார்" என்று திரு. யோகி அறிவித்தார்.

அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து வாழ்த்தொலி எழுப்பினர்.

முத்தமிழ் விழாவில் தமிழீழத் தேசிய விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களிடம் (மறைந்தவர்களுக்கு அவர்களின் உறவினர்களிடம்) திரு. பிரபாகரன் விருதுகளைக் கையளித்து உரையாற்றினார்.

நேற்றைய விருது வழங்கும் வைபவத்தின்போது மேடையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரன், பிரதித் தலைவர் கோ. மகேந்திரராஜா (மாத்தயா), விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மூத்த உறுப்பினர் திரு. பேபி சுப்பிரமணியம் மற்றும் வே. பாலகுமாரன், திரு. தேவர் ஆகியோரும் மேடையில் அமர்ந்திருந்தனர்.

விருது வழங்கும் நிகழ்ச்சியை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி நெறிப்படுத்தினார். கவிஞர் புதுவை இரத்தினதுரை அவருக்கு உதவியாகச் செயற்பட்டார்.

தேசிய விருது வழங்கும் வைபவம் முடிவுற்றதும் தலைவர் பிரபாகரன் மக்களிடம் விடைபெற்று புறப்பட்டுச் சென்றார். கூடியிருந்த மக்கள் பெரும் கரகோஷம் செய்து அவரை வழியனுப்பி வைத்தனர். [உ-117]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 11 - 06 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org